# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.13002–A/விசாரணை/2009**

<u>விசாரணை நடைபெற்ற நாள் 22.09.2009.</u>

முன்னிலை: முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,
எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர்: திரு R.அப்பு நடேசன், Ex. M.L.A.,
கோஸ்டல் என்விரான்மெண்ட் அண்ட்
எக்கலாஜிகல் கன்சர்வேசன் கமிட்டி,
கீரைக்காரன்தட்டு,
திசையன்விளை,
திருநெல்வேலி மாவட்டம் – 627 657.

பொது அதிகார அமைப்பு: பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய்த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

பொதுத் தகவல் அலுவலர்,
முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக
ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005.

*****

மனுதாரர் திரு R.அப்பு நடேசன் சார்பாக திரு S.ராஜா மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திருமதி சிந்தியா சாமுவேல், பிரிவு அலுவலர், வருவாய்த் துறை, தலைமைச் செயலகம், சென்னை / திரு A.சுந்தரமூர்த்தி, உதவி ஆணையர், முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை இன்று (22.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 28.10.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், வருவாய்த் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களிடம் 2 இனங்களில் தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். 05.11.2008 அன்று நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்குத் தகவல் வேண்டி மனுதாரருடைய மனு அனுப்பப்பட்டுள்ளதாகப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. முழுமையான தகவல் எதுவும் பெறாததால் 21.12.2008 அன்று நில நிர்வாக ஆணையர், சென்னை அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு மீண்டும் மனுச் செய்துள்ளார். 12.02.2009 அன்று இதே துறைக்கு மேல் முறையீடும் 08.06.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (22.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொதுத் தகவல் அலுவலர், வருவாய்த் துறை, தலைமைச் செயலகம், சென்னையிடம் விசாரித்த போது 28.10.2008 நாளிட்ட மனு தங்களுக்குக் கிடைக்கப் பெறவில்லையெனவும், 21.12.2008 நாளில் 12 இனங்களில் மனுதாரர் கேட்ட மனு கிடைத்துள்ளதாகவும் கூறினார். 28.10.2008 நாளிட்ட மனுவின் ஒரு நகல் பொதுத் தகவல் அலுவலருக்கு விசாரணையின் போது தரப்பட்டது. இம்மனுவில் மனுதாரர் கேட்ட 2 இனங்களுக்கும் உரிய தகவல்களை ஒரு வாரத்திற்குள் மனுதாரருக்கு அளித்து ஒப்புகை பெற்று விவரத்தை ஆணையத்திற்குத் தெரிவிக்கும்படி பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 23.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.13002–A/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய்த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

பொதுத் தகவல் அலுவலர்,
முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக
ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005.

திரு R.அப்பு நடேசன், Ex. M.L.A.,
கோஸ்டல் என்விரான்மெண்ட் அண்ட்
எக்கலாஜிகல் கன்சர்வேசன் கமிட்டி,
கீரைக்காரன்தட்டு,
திசையன்விளை,
திருநெல்வேலி மாவட்டம் – 627 657.

*"ptl"*